


ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் கோபி நகரத்தில் நகரக் கழகச் செயலாளர் என்.ஆர்.நாகராஜ் தலைமையில் மாணவரணி மாவட்ட அமைப்பாளர் டி.கே.ப.கிருபாகரன் வரவேற்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமைக் கழகப் பேச்சாளர் டி.கோவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் குறிஞ்சி என்.சிவகுமார், கள்ளிப்பட்டி மணி, காயத்ரி சீனிவாசன், பெருமாள்சாமி, மணிமாறன், எஸ்.ஏ.முருகன் மாணவரணி துணை அமைப்பாளர்கள் வினோத் குமார், செந்தூர், நவீன் குமார் சூரிய பிரசாந்த், பி.மெய்யழகன், சரோஜா, ராஜாமணி, சக்திவேல், அய்யசாமி சவுக்கத் அலி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மாணவர் அணியினர் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் டி.கே.கிருபாகரன் செய்திருந்தார்.



பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் பெரம்பலூரில் நடைபெற்றது. கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க. அன்பழகன், தலைமைக் கழக பேச்சாளர் கு.மொழிமாறன், மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மொழிப்போர்த் தியாகி மூங்கில்பாடி ரெங்கராஜிக்கு மரியாதை செலுத்தப்பட்டது. இதில் பா.துரைசாமி, இரா.ப.பரமேஷ்குமார், வி.எஸ்.பெரியசாமி, வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், கி.முகுந்தன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், எஸ்.அண்ணாதுரை, அ.நடராஜன், தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், நூருல்ஹிதா இஸ்மாயில், செ.ரவிச்சந்திரன், என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன் டாக்டர் செ.வல்லபன் ஆகியோர் உள்ளனர்.

## 2030க்குள் 1 டிரில்லியன் முதலீடு என்ற பொருளாதாரக் கனவை -

# முதல்வரின் சரித்திரப் பயணம் நிச்சயம் நனவாக்கும்!

## ‘தினகரன்’ தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன.30-

‘2030-ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன்’ என்ற பொருளாதாரக் கனவை, முதல்வரின் 10 நாள் சரித்திரப் பயணம் நிச்சயம் நனவாக்கும் என ‘தினகரன்’ நாளேடு 28.1.2024 அன்று தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இது குறித்த அத்தலையங்கம் வருமாறு:-

இந்திய மாநிலங்களில் எப்போதும் தனித்துவம் கொண்டது தமிழ்நாடு. கல்வி, சுகாதாரம், விளையாட்டு, சமூகநீதி சார்ந்த திட்டங்கள் என்று அனைத்திலும் முத்திரை பதித்து நிற்கிறது தமிழ் நிலம். இப்படிப்பட்ட நிலையில், 2030-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறச் செய்யவேண்டும் என்பது அரசின் இலக்காக உள்ளது. இதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது. இந்த வகையில், சமீபத்தில் சென்னையில் நடந்த தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில், ரூ.6,64,180 கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதன் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் 27 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் சூழல் உருவாகியுள்ளது. இந்த மாநாட்டைத் தொடர்ந்து, மேலும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, முதல்வர் அவர்கள் ஸ்பெயின் நாட்டுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார். அங்கு பல்வேறு தொழிலதிபர்களை சந்தித்துப் பேசுகிறார். இதேபோல் ஆஸ்திரேலியா, அமெரிக்காவுக்கும் சென்று தொழிலதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார். பேச்சுவார்த்தை என்பதை வெறும் சம்பிரதாயமாக இல்லாமல், சரித்திர சாதனையாக மாற்றுவதை, முதல்வரின் கடந்த கால வெளிநாட்டுப் பயணங்கள் நிரூபித்துள்ளன.


தினகரன்
ஜனவரி 28, 2024 ஞாயிற்றுக்கிழமை
சரித்திர பயணம்

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவில் தொழில் தொடங்க உகந்த மாநிலங்களின் பட்டியலை ஒன்றிய அரசு வெளியிட்டது. அப்போது 14வது இடத்தில் தமிழ்நாடு இருந்தது. ஆனால், முதல்வரின் முத்தான முயற்சியும், அரசு இயந்திரத்தின் சீரான சுழற்சியும், தற்போது தமிழ்நாட்டை மூன்றாம் இடத்திற்கு முன்னிறுத்தி உள்ளது. ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலில்,

5-ஆவது இடத்தில் இருந்த தமிழ்நாடு, இப்போது 3-ஆம் இடத்தில் இருக்கிறது. புத்தொழில் சார்ந்த செயல்பாட்டுக்கான ‘லீடட்’ அங்கீகாரத்தை, ஒன்றிய அரசு நமது மாநிலத்திற்கு வழங்கி இருப்பது வேறு எவருக்கும் இல்லாத பெருமிதம்.

இந்தியாவிலேயே, தமிழ்நாடு மொத்த உற்பத்தியில் (ஜிஎஸ்டிபி) இரண்டாவது பெரிய மாநிலமாக திகழ்கிறது. தற்போதைய தமிழ்நாட்டின் ஜிஎஸ்டிபி 320 பில்லியன் என்ற அளவில் உள்ளது. குறிப்பாக தமிழ்நாடு கடந்த 2 ஆண்டுகளில் எலக்ட்ரானிக்ஸ், டெக்ஸ்டைல்ஸ், லெதர் ஆகிய துறைகளில் மிகவும் முன்னேறியுள்ளது. இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகளில், 15 சதவீதம் தமிழ்நாட்டில் தான் இருக்கிறது. இந்த தொழிற்சாலைகளில் மட்டும் 22 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர்.

இதில், தமிழ்நாடு 10 பில்லியன் டாலர் அந்நிய முதலீடுகளை ஈர்த்து, சுமார் 2 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. மிக முக்கியமாக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள், நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்பதை உணர்ந்து, பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. இது ஒருபுறமிருக்க, பெரும் முதலீடுகளை ஈர்ப்பதற்கான செயல்திட்டங்களையும் நேர்த்தியாக வகுத்து வருகிறது. இதற்காக ஆராய்ச்சி, மேம்பாடு, வான்வழி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இது போன்ற அரசின் நடவடிக்கைகள், ‘2030ம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன்’ என்ற முதல்வரின் பொருளாதார கனவை நிச்சயம் நனவாக்கும். அதற்கு முதல்வரின் 10 நாள் வெளிநாடு பயணம் விதையாக அமையும். தமிழ்நிலத்தின் தொழில் வளத்தை மேலும் செழுமையாக்கும் இலக்கோடு, முதல்வர் மீண்டும் ஒரு சரித்திர பயணத்தை மேற்கொள்கிறார். இந்த பயணத்திற்கு வாழ்த்து தெரிவித்து வழியனுப்புவது நமக்கான கடமை என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## 5 கோடியே 15லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

# திண்டிவனம் அருகே சிறு பாலம், தார்ச்சாலை அமைக்கும் பணி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பணியை தொடங்கி வைத்தார்!

திண்டிவனம், ஜன.30-

விழுப்புரம் மாவட்ட நெடுஞ்சாலை துறை சார்பில் திண்டிவனம் தொகுதி ஒலக்கூர் ஒன்றியம் தாதாபுரம் ஊராட்சியிலிருந்து அமணப்பாக்கம் சாலையில் 6 கண்கள் கொண்ட சிறுபாலம் அமைக்கவும் ,மயிலம் ஒன்றியம் பேரணியில் இருந்து பெரிய தச்சூர் செல்லும் ஒரு வழித்தட சாலையை இடைவழி சாலையாகஅகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணியின் துவக்க விழா தாதாபுரம் ஊராட்சி கீழ் மலையனூர் பகுதியில் நடைபெற்றது.

நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் சிவ சேனா தலைமை தாங்கினார்.

ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், துணை சேர்மன் ராஜாராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் பூமி லிங்கம் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ஒருங்கிணைந்த சாலை உட் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 5 கோடியே 15லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 கண்கள் கொண்ட சிறுபாலம் அமைக்கவும், பேரணி பெரியதச்சூர் சாலையை இடைவழிச்சாலையாக அகலப்படுத்தி, உறுதிப்படுத்தும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இதைத்தொடர்ந்து தாதா புரத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையையும் தாதாபுரம்அரசு நடுநிலைப் பள்ளியில் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சத்துணவு மையத்தினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்பொழுது முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவினை அமைச்சர் சாப்பிட்டு பார்த்து ஆய்வு மேற்கொண்டார்.

இதைத்தொடர்ந்து தாதாபுரம் செல்லும் குறுகிய ஏரிக்கரை சாலை பகுதியை அகலப்படுத்துவதற்கு துறை சார்ந்த அதிகாரியுடன் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர் மனோ சித்ரா ராஜேஸ்வரன், பொதுப்பணித்துறை இளநிலை பொறியாளர் ராமு, உதவி பொறியாளர் தீனதயாளன், ஒன்றிய கவுன்சிலர்கள் அன்பரசி பிரகாஷ், ஜெய்சங்கர் ,அண்ணாதுரை, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பிரகாஷ், நிர்வாகிகள் பழனி, ராமகிருஷ்ணன், ராமச்சந்திரன், சத்யா, ராமசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தாம்பரம் செல்வகுமார் பேரன் - செல்வபிரகாஷ் மகன்

# பி.பன்னீர்செல்வம் உடல்நலக் குறைவால் மறைவு!

## எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. - டி.காமராஜ் - எஸ்.இந்திரன் அஞ்சலி!

தாம்பரம், ஜன.30-

தாம்பரம் நகரக் கழகத்தின் முன்னாள் துணைச் செயலாளரும், முன்னாள் மாவட்டக் கழக பிரதிநிதியுமான இரா. செல்வகுமார், முன்னாள் எம்.சி. பேரனும், தாம்பரம் நகர தொழில்நுட்ப அணியின் அமைப்பாளர் செ.செல்வபிரகாஷ் மகனும், தலைவர் கலைஞர் அவர்களால் பன்னீர் செல்வம் என்று பெயர் சூட்டப்பட்டவரும் கழகப் பொருளாளர் நாடாளுமன்றக் குழு தலைவர் டி.ஆர். பாலு எம்.பி. அவர்களால், தாம்பரம் மிலிட்டிரி ஏர்போஸ் கேந்திரிய வித்தியாலயா பள்ளியில் கடந்த நான்கு ஆண்டுக்குமுன் சேர்த்து இன்று வரையில் படிக்க வைத்து வந்த பி.பன்னீர் செல்வம் (வயது 10) உடல் நிலை குன்றிய நிலையில் சென்னை பேபி மருந்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். 28.1.2024 அன்று மாலை 6.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்தார்.

தகவலறிந்து தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மண்டலத் தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் ஆகியோர் மருந்துவமனைக்கு சென்று குழந்தைக்கு அஞ்சலி செலுத்தினர்.

அன்னரது இறுதிச் சடங்குகள் நேற்று (29.1.2024) பகல் 3 மணிக்கு எண் 9/23, 2-வது தெரு, ரங்கநாதபுரம், மேற்கு தாம்பரம் என்கின்ற விலாசத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெற்று இறுதி ஊர்வலமாகச் சென்று திருநீர்மலை சாலையில் அமைந்துள்ள இடுகாட்டில் நல்லடக்கம் நடைபெற்றது.

## செங்கல்பட்டு, திண்டிவனம் வழியாகச் செல்லும்

# தென்மாவட்டப் பேருந்துகள்- இன்று முதல் கிளாம்பாக்கத்தில் இருந்தே புறப்படும்!

## போக்குவரத்துத் துறை உறுதியான அறிவிப்பு!

சென்னை,ஜன.30-

தமிழ்நாட்டில் தலைநகரமான சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காகவும் சென்னை மக்களின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காகவும் வண்டலூரை அடுத்து கிளாம்பாக்கத்தின் அதிநவீன கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்

30/12/2023 அன்று முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இதில் முதற்கட்டமாக அரசு விரைவு போக்குவரத்து கழகத்தின் அனைத்து தடங்களும் கிளாம்பாக்கத்தில் (KCBT) இருந்து இயக்கப்படுகின்றன.

பின்னர் 24/1/2024 முதல் தனியார் ஆம்னி பேருந்துகள் அனைத்தும் கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படுகின்றன.

இதன் தொடர்ச்சியாக இன்று 30/01/2024 அன்று முதல் (செவ்வாய்க்கிழமை) இருந்து அனைத்து போக்குவரத்து கழகங்களை சார்ந்த தென் மாவட்டங்களுக்கு செங்கல்பட்டு திண்டிவனம் வழியாக செல்லும் 710 பேருந்துகளின் புறப்பாடுகள் சென்னை கிளம்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும்.

160 பேருந்துகளின் நடைகள் மாதவரம் பேருந்து நிலையத்தில் இருந்தும் இயக்கப்படும்.

கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து மேற்கண்ட செங்கல்பட்டு திண்டிவனம் வழியாக இயக்கப்படும் பேருந்துகள் 30/1/2024 முதல் இயக்கப்பட மாட்டாது.

கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இசிஆர் வழியாக செல்லும் பேருந்துகளும் , பூந்தமல்லி வழியாக வேலூர், ஒசூர், ஆம்பூர் , திருப்பத்தூர் இயக்கப்படும் பேருந்துகள் வழக்கம் போல் கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும்.

மேற்கண்ட பேருந்து இயக்கம் மாற்றத்தில் பயணிகள் வசதிக்காக விழுப்புரம் போக்குவரத்து கோட்ட பேருந்துகள் மட்டும் தென் மாவட்டங்களில் இருந்து சென்னை நோக்கி செல்லும் போது, தாம்பரம் வரை இயக்கப்பட்டு பின் அங்கிருந்து கிளம்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு இயக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குறிப்பின்படி மக்கள் பயணிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, காணை ஊராட்சி ஒன்றியம், கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான கல்பட்டு நத்தமேடு முதல் சென்னை வரையான புதிய போக்குவரத்து வழித்தடத்தை விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், ஒன்றியக் குழுத் தலைவர் என்.கலைச்செல்வி, ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு வி.இராஜா, மாவட்ட கவுன்சிலர் ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், ஒன்றிய குழு துணைத் தலைவர் வீரராகவன் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## பெரம்பலூரில்

# மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

## குன்னம் ராஜேந்திரன் தலைமையில்!

பெரம்பலூர், ஜன. 30 -

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்ற தேர்தல் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி பெரம்பலூர் மாவட்ட நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் அன்னியூர் சிவா கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

இதில் மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், பொதுக் குழு உறுப்பினர் செ.அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர்கள் வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, டாக்டர் செ.வல்லபன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம். வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம்,குரும்பலூர் பேரூராட்சி தலைவர் சங்கீதா ரமேஷ், அரும்பாவூர் பேரூராட்சி தலைவர் வள்ளியம்மை ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூராட்சி தலைவர் பாக்கியலட்சுமி செங்குட்டுவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# 113வது வார்டு சபைக் கூட்டம்!

## பிரேமா சுரேஸ் எம்.சி.தலைமை!

சென்னை,ஜன,30-

ஆயிரம் விளக்கு 113 வது வார்டில் மாமன்ற உறுப்பினர்பிரேமா சுரேஸ் தலைமையில் நுங்கம்பாக்கம் கிராமா தெருவில் ஏரியா சபைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டு சாலை அமைப்பது மற்றும் பல்வேறு கோரிக்கைகள் குறித்தும் பேசினர். அப்போது பிரேமா சுரேஸ் எம்.சி. இந்த சாலை அகலம் குறைவாக இருக்கிறது. வண்டிகள் வருவதற்கு சிரமமாக. இருக்கிறது தற்போது இந்தத் தெருவுக்கு ஐ.எல்.பி. கற்கள் போடுவதற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் உங்கள் கோரிக்கைகள் நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**குடந்தை பத்மநாபன்**
**சனவரி 30 (1989)**



**குடந்தை வட்டக் கழகமாக இருந்தபோது முதல் வட்டச் செயலாளராகவும், அடுத்து குடந்தையின் முதல் நகரக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டுகாலம் சிறையிலிருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**